SENIOR TAMILS' CENTRE OF ONTARIO
ஒன்ராரியோ முதுதமிழர் மன்றம்

வைகறை
VAIHARAI-e-magazine

இதழ் 59
May 14, 2021







**Twelve golden sentences:**

1 Heavy rain remind us of challenges in life. Never ask for a lighter rain, just pray for a better umbrella. That is Attitude.

2 When flood comes, fish eats ants and when flood recedes, ants eat fish. Only time matters. Just hold on. God gives opportunity to everyone.

3 In a theatre when drama plays, you opt for front seats. When film is screened, you opt for rear seats. Your position in life is only relative. Not absolute.

4 For making soap, oil is required. But to clean oil, soap is required. This is the irony of life.

5 Life is not about finding the right person. But creating the right relationship. This will never work

6 It's not how we care in the beginning. But how much we care till the end.

7 Every problem has (N+1) solutions:
where N is the number of solutions that you have tried and 1 is that you have not tried.

8 When you are in problem, don't think it's the End. It is only a Bend in life.

9 Difference between Man and God is God gives, gives and forgives. Man gets, gets and forgets.

10 Only two categories of people are happy in life -The Mad and the Child. Be Mad to achieve a goal. Be a Child to enjoy what you achieved.

11 Never play with the feelings of others. You may win. But loose the person for lifetime.

12 There is NO Escalator to success. ONLY STEPS!!!

Hope is life's greatest treasure. If you have no hope, create some. (Daisaku Ikeda)




பெருந்தலைவர் காமராஜர், முதல்வராக இருந்த போது, சென்னை தாம்பரம் குடிசைவாசிகளுக்கு பட்டா வேண்டும் என்று ஜீவா போராடினார். அப்போது, தாம்பரத்தில் ஓர் ஆரம்பப்பள்ளியை திறந்து வைக்கச் சென்றார் காமராஜர். போகும் வழியில் தான் ஜீவாவின் வீடு இருந்தது. அந்தப் பள்ளிக்கு அடிக்கல் நாட்டியவர் ஜீவா என்பதால், அவரையும் அழைத்துச் செல்வது தான் சரியாக இருக்கும் என்று நினைத்து, காரை ஜீவாவின் வீட்டுக்கு விடச் சொன்னார். ஒழுகும் கூரை வீடு ஒன்றில் குடியிருந்தார் ஜீவா. திடீரென தன்னுடைய வீட்டுக்கு காமராஜர் வந்ததைக் கண்டு ஆச்சர்யப்பட்டு "என்ன காமராஜ்" என்று கேட்டார்" ஜீவா. "என்ன நீங்க இந்த வீட்டுல இருக்கீங்க...?" என்று கேட்டு ஆதங்கப்பட்டார் காமராஜர். உடனே ஜீவா, "நான் மட்டுமா..? இங்கே இருக்கிற எல்லோரையும் போலத்தான் நானும் இருக்கேன், என்று சர்வ சாதாரணமாக சொன்னார். காமராஜரை, உட்கார வைக்க, ஒரு நாற்காலி கூட இல்லாததால், இருவரும், நின்று கொண்டே பேசினார்கள். "நீ அடிக்கல் நாட்டிய, பள்ளிக் கூடத்தைத் திறக்கணும். அதான் உன்னையும் கூப்பிட்டுப் போக வந்தேன்" என்றார் காமராஜர். "காமராஜ், நீ முதலமைச்சர், நீ திறந்தா போதும்" என்று ஜீவா மறுக்க, "அட... ஆரம்பிச்ச நீ இல்லாம, நான் எப்படிப் போக, கிளம்பு போகலாம்" என்று அழைத்தார், காமராஜர், "அப்படின்னா, நீ முன்னால போ. நான் அரை மணி நேரத்துல வந்துடுறேன் " என்று அனுப்பி வைத்தார். "கண்டிப்பாக வரணும்" என்றார் காமராஜர்.

விழாவுக்கு, அரை மணிக்கு மேல் தாமதமாகவே வந்தார் ஜீவா. "என்ன ஜீவா, இப்படி லேட் பண்ணிட்டியே...? " என்று காமராஜர் உரிமையுடன் கடிந்து கொண்டார். உடனே ஜீவா, "நல்ல வேட்டி ஒண்ணுதாம்பா இருக்கு. அதை உடனே துவைச்சு, காய வைச்சு, கட்டிட்டு வர்றேன். அதான் தாமதம். தப்பா நினைச்சுக்காதே"... என்றார். உடனே கண் கலங்கி விட்டார் காமராஜர். விழா நல்ல படியாக முடிந்தது. ஆனால் ஜீவாவின் வறுமை, காமராஜரை மிகவும் வாட்டியது. அதனால் ஜீவாவுக்கு தெரியாமல், அவரது கம்யூனிஸ்ட் நண்பர்களை அழைத்துப் பேசினார். "ஜீவாவுக்கு வீடு கொடுத்தா போக மாட்டான். காரு கொடுத்தாலும் வாங்க மாட்டான். ஆனா, அவனைப் போல தியாகிகள் எல்லாம் இத்தனை கஷ்டப் படக்கூடாது என்ன செய்யலாம்"....? என்றார். கூட்டத்தில் இருந்த ஒருவர், "ஜீவாவின் மனைவி படித்தவர். அதனால் அவருக்கு ஏதாவது பள்ளியில் அரசு வேலை கொடுத்தா, அந்த குடும்பம் நிம்மதியாக இருக்கும்" என்றார். உடனே காமராஜர், "ரொம்ப நல்ல யோசனை. ஆனா, நான் கொடுத்தா, அவன் பொண்டாட்டியை வேலை செய்ய விட மாட்டான். அதனால நீங்களா ஜீவா மனைவியிடம் பேசி, "வீட்டுக்குப் பக்கத்துல பள்ளிக்கூடத்துல ஒரு வேலை காலியாக இருக்குன்னு சொல்லி மனு போடச் சொல்லுங்க. உடனே, நான் வேலை போட்டுத் தர்றேன்... ஆனா, இந்த விஷயம் வேறு யாருக்கும் தெரியக்கூடாது அவன் முரடன், உடனே வேலையை விட வைச்சுடுவான் என்று சொல்லி அனுப்பி வைத்தார். அதன்படியே ஜீவாவுக்குத் தெரியாமல், அவருடைய மனைவிக்கு அரசு வேலை கொடுத்தார் காமராஜர். அதற்குப் பின்னரே ஜீவாவின் வாழ்க்கையில் வறுமை ஒழிந்தது. காமராஜர், ஜீவா இருவருடைய நட்பும் வார்த்தைகளால் வடிக்க முடியாதது. நோய் வாய்ப்பட்டு சென்னை அரசு பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார் ஜீவா. தனக்கு முடிவு வந்து விட்டதைத் தெரிந்து கொண்டவர், கடைசியாக உதிர்த்த வார்த்தைகள்... "காமராஜருக்கு போன் பண்ணுங்கள்". என்பது தான். இனி எங்கே காணமுடியும்..? இது போன்ற தலைவர்களை. அடித்தட்டு மக்களோடு மக்களாக, வறுமையை உணர்ந்த, பகிர்ந்த தலைவர்கள்,கர்மவீரர் காமராஜர், ஜீவா, கக்கன் போன்ற தலைவர்கள்.




நேதாஜி அவர்கள் முதல் முறையாக ஹிட்லரை சந்திக்க சென்ற பொது ஹிட்லருடைய ஆட்கள் நேதாஜியை ஒரு அறையில் உக்கார வைத்தனர் . நேதாஜி அவர்கள் ஒரு புத்தகத்தை படிக்க ஆரம்பித்து விட்டார் . ஹிட்லருடைய ஆட்கள் ஹிட்லருக்கு தெரிவிக்க சென்றனர் .ஹிட்லர் போன்ற வேடமணிந்த பலர் வந்தபோதும் நேதாஜி கண்டுகொள்ளாமல் படிப்பதை தொடர்ந்தார் . இதில் என்ன விஷயம் என்றால் பல சமயங்களில் ஹிட்லர் போன்ற வேடமணிந்தவர்களை கண்டு பல மனிதர்கள் தாங்கள் ஹிட்லரை சந்தித்தாக சொல்லியிருக்கிறார்கள்..கடைசியில் ஹிட்லரே வந்து நேதாஜியின் தோளில் கை வைத்தவுடனே நேதாஜி அவர்கள் “ஹெலோ ஹிட்லர்” என்றார் . ஹிட்லருக்கு ஒரே வியப்பு...ஹிட்லர் நேதாஜியிடம் ” எப்படி நீங்கள் என்னை கண்டுபிடித்தீர்கள் இதற்கு முன் நீங்கள் என்னை சந்தித்தது கிடையாது ” என்று கேட்டார். நேதாஜி அவர்கள் “இந்த உலகத்தில் சுபாஷ் சந்திர போசின் தோளில் கை வைக்க ஹிட்லரை தவிர வேறு யாருக்கும் தைரியம் கிடையாது” என்றார்...! (எத்தனைமுறை படித்தாலும் மறுபடியும் படிக்கத்தூண்டுகிற ஒரு சரித்திர நிகழ்வு)..



**திராட்சைக்கொத்து சொன்ன வாழ்க்கைப் பாடம்.....**

இன்றைக்கு எல்லோரும் தனிமையையே விரும்பிகின்றனர். சுற்றார், உறவினர், நண்பர்கள் ஆகியோருடன் சுமுகமான உறவினை வைத்துக் கொள்ளவது இல்லை. எல்லோருடனும் இணைந்து வாழ்வதே பலத்தினையும், மகிழ்ச்சியையும் கொடுக்கும். இதனையே திராட்சைக்கொத்து சொன்ன வாழ்க்கைப் பாடம் கதை மூலம் அறிந்து கொள்ளலாம். சந்தியா புதிதாக திருமணமாகி சந்திரனின் கூட்டுக் குடும்பத்திற்கு மருகளாக வந்தாள். புகுந்த வீட்டில் மாமனார், மாமியார் சந்திரனின் அண்ணன்கள் இருவர், அவர்களது மனைவிகள் மற்றும் குழந்தைகளுடன் ஒரே வீட்டில் கூட்டுக் குடும்பமாய் வாழ்வது சந்தியாவிற்கு பிடிக்கவில்லை. குழந்தைகளின் சேட்டையும், மாமியாரின் விருப்பபடி, குடும்பத்தினர் எல்லோருக்கும் ஒரேமாதிரியான உணவினை சமைப்பது உள்ளிட்ட விசயங்களால் அடிக்கடி தனிக்குடித்தனம் செல்ல வேண்டும் என்பதைப் பற்றி சந்திரனிடம் சொல்லிக் கொண்டிருந்தாள். சந்திரனுக்கோ அன்பான அழகான கூட்டு குடும்ப வாழ்க்கையை விட்டுவிட்டு தனிக்குடித்தனம் செல்ல விருப்பமில்லை. கூட்டு குடும்பத்தின் நன்மையையும், மகிழ்ச்சியையும் தன்னுடைய மனைவிக்கு எடுத்துச் சொல்ல எவ்வளவோ முயன்றும் சந்தியாவை மாற்ற முடியவில்லை. ஒருநாள் சந்தியாவும் சந்திரனும் கடைவீதிக்குச் சென்றனர். வீட்டுக்குத் தேவையான பொருட்களை வாங்கினர். அப்போது சந்திரன் வழக்கமாக பழங்கள் வாங்கும் பெண்ணின் கடைக்கு சந்தியாவை அழைத்துச் சென்றான். கடைக்காரப் பெண்மணி அவர்களை வரவேற்றார். ஆப்பிள், ஆரஞ்சு, மாதுளை ஆகியவற்றை சந்தியா வாங்கினாள். திராட்சை பழத்தினை வாங்க எண்ணி திராட்சையைப் பார்த்தாள். கொத்தாக உள்ள திராட்சை தனியாகவும், கொத்திலிருந்து உதிர்ந்த திராட்சை தனியாகவும் பிரித்து வைக்கப்பட்டிருந்தது. கடைக்கார பெண்ணிடம் "திராட்சையின் விலை என்ன?, ஏன் திராட்சையை இரு பிரிவுகளாகப் பிரித்து வைத்துள்ளீர்கள்?" என்று கேட்டாள். அதற்கு அப்பெண்மணி "கொத்தாக உள்ள திராட்சை கிலோ 80 ரூபாய், உதிர்ந்த திராட்சைகள் கிலோ 50 ரூபாய்" என்று கூறினாள்.

கடைக்காரப் பெண்மணி கூறியதைக் கேட்டதும் சந்தியா "இரண்டும் ஒரே தரத்தில் தானே உள்ளன. பின் ஏன் விலையில் வித்தியாசம்?" என்று கேட்டாள். "திராட்சைக் கொத்தில் இருந்து பிரிந்து வந்ததால் தனியாக உள்ள பழங்கள் விரைவில் கெட்டுப் போய் விடும். ஆதலால் அவற்றின் மதிப்பினைக் குறைத்து விற்கிறோம்." என்று கூறினாள். நிகழ்ந்தவைகளை எல்லாம் கவனித்துக் கொண்டிருந்த சந்திரன் திராட்சைக் கொத்தினை வைத்து சந்தியாவிற்கு கூட்டுக்குடும்ப ஒற்றுமையை விளக்க எண்ணினான். பழக்கடையை விட்டு வெளியேறியதும் சந்திரன் சந்தியாவிடம் "சந்தியா, திராட்சை கொத்தைவிட்டு கீழே விழுந்த பழங்களின் விலையைக் குறைந்து கடைக்கார பெண் நமக்கு கொடுத்ததைக் கவனித்தாயா?" என்று கேட்டாள். "ஆமாம் அதற்கென்ன இப்போது?" என்று எதிர்க் கேள்வி கேட்டாள். "திராட்சைக் கொத்தைப் போன்றதுதான் கூட்டுக் குடும்பமும். திராட்சைக் கொத்திலிருந்து பிரிந்த பழங்கள் எப்படி தன்னுடைய மதிப்பினை இழந்தனவோ, அப்படித்தான் நாமும் நம்முடைய மதிப்பினை இழப்போம். நம்முடைய சொந்தங்கள், நண்பர்கள் உள்ளிட்ட எல்லோருடனுமான சுமுகமான உறவானது நமக்கு எப்போதும் மதிப்பையும், வலிமையையும் கூட்டும்." என்றான். சந்திரன் கூறியதைக் கேட்டதும் சந்தியா தெளிவடைந்து "நாம் நம்முடைய வீட்டில் கூட்டுக் குடும்பமாக வாழ்க்கையைத் தொடருவோம்."

என்றாள். சந்தியா கூறியதைக் கேட்ட சந்திரன் பெரும் மகிழ்ச்சி கொண்டான்.














**HAZARDOUS MATERIALS DATA SHEET**

| | |
|---|---|
| ELEMENT: | Woman |
| SYMBOL: | ⚲ |
| DISCOVERER: | Adam |
| ATOMIC MASS: | Accepted as 55kg, but known to vary from 45kg to 225kg |

**PHYSICAL PROPERTIES**

1. Body surface normally covered with film of powder and paint
2. Boils at absolutely nothing – freezes for no apparent reason
3. Found in various grades ranging from virgin material to common ore

**CHEMICAL PROPERTIES**

1. Reacts well to gold, platinum and all precious stones
2. Explodes spontaneously without reason or warning
3. The most powerful money reducing agent known to man

**COMMON USE**

1. Highly ornamental, especially in sports cars
2. Can greatly aid relaxation
3. Can be a very effective cleaning agent

**HAZARDS**

1. Turns green when placed alongside a superior specimen
2. Possession of more than one is possible but specimens must never make eye contact









பிரச்சினை இல்லாத வாழ்க்கைதான் சபிக்கப்பட்ட வாழ்க்கை. கடவுளிடம் ஒரு விவசாயி கடுமையாகச் சண்டைக்குப் போனான். "உனக்குப் பயிர்களைப் பற்றி என்ன தெரியும்? நீ நினைத்தபோது மழையை அனுப்புகிறாய். தப்பான சமயத்தில் காற்றை வீசுகிறாய். உன்னால் பெரிய தொந்தரவாக இருக்கிறது. பேசாமல், இந்த வேலைகளை விவசாயி ஒருத்தனிடம் ஒப்படைத்துவிடேன்!" என்றான். கடவுள் உடனே, " அப்படியா? சரி. இனிமேல் வெளிச்சம், மழை, காற்று எல்லாம் உன் கட்டுப்பாட்டிலேயே இருக்கட்டும்" என்று வரம் அருளிவிட்டுப் போய்விட்டார். விவசாயிக்கு சந்தோஷம் பிடிபடவில்லை. அடுத்த விதைப்பிற்கான பருவம் வந்தது. "மழையே பெய்" என்றான். பெய்தது. நிறுத்தச் சொன்னபோது, மழை நின்றது. ஈரமான நிலத்தை உழுதான். தேவையான வேகத்தில் காற்றை வீசச் செய்து, விதையை தூவினான். மழை, வெயில், காற்று எல்லாமே அவன் சொன்ன பேச்சைக் கேட்டன. பயிர் பச்சைப்பசேல் என வளர்ந்தது. வயல்வெளியைப் பார்க்கவே மிகவும் ரம்மியமாக இருந்தது. அறுவடைக் காலமும் வந்தது. விவசாயி ஒரு கதிரை அறுத்தான். அதனை உதிர்த்து, திறந்து பார்த்தான். அதிர்ந்தான். உள்ளே தானியத்தைக் காணவில்லை, மிகச் சிறிய பதர்தான் இருந்தது. அடுத்தது, அதற்கடுத்தது என்று ஒவ்வொரு தானியக்கதிராக வெட்டி எடுத்து உடைத்துப் பார்த்தால் ஒன்றிலுமே தானியம் இல்லை. "ஏ கடவுளே!" என்று கோபத்தோடு கூப்பிட்டான். "மழை, வெயில், காற்று எல்லாவற்றையுமே மிகச் சரியான விகிதங்களில்தானே பயன்படுத்தினேன்! ஆனாலும், பயிர்கள் பாழாகிவிட்டதே, ஏன்?" எனக்கேட்டான். கடவுள் புன்னகைத்தார்: "என் கட்டுப்பாட்டில் இருந்தபோது காற்று வேகமாக வீசும். அப்போது பயிர்களெல்லாம், அம்மாவை இறுக்கிக்கொள்ளும் குழந் தைகளைப்போல பூமிக்குள் தங்கள் வேர்களை மிக ஆழமாக அனுப்பிப் பிடித்துக்கொள்ளும். மழை குறைந்தால், தண்ணீரைத் தேடி வேர்களை நாலாபக்கமும் அனுப்பும்.

போராட்டம் இருந்தால்தான் தாவரங்கள் தங்களைப் பாதுகாத்துக்கொண்டு, வலுவாக வளரும். எல்லாமே வசதியாக அமைத்துக் கொடுத்ததில் உன் பயிர்களுக்கு சோம்பேறித்தனம் வந்துவிட்டது. தளதளவென்று வளர்ந்ததே தவிர, ஆரோக்கியமான தானியங்களைக் கொடுக்க அவற்றிற்கு தெரியவில்லை!" என்றார். வேண்டாமய்யா, உன் மழையும் காற்றும்! நீயே வைத்துக் கொள்" என்று கடவுளிடமே அவற்றைத் திருப்பித் தந்துவிட்டான் விவசாயி. பிரச்சினைகள் உங்களைப் போட்டு அழுத்தும்போதுதான், உங்களின் திறமை அதிகரிக்கும். இருட்டு என்று ஒரு பிரச்சினை இருந்ததால்தான் மின்விளக்கு கண்டுபிடிக்கப்பட்டது. பயணம் என்பது பிரச்சினையானபோதுதான் வாகனம் உருவானது. பிரச்சினைகளே இல்லாமல் இருந்துவிட்டால் நம் மூளையின் திறனை எவ்வாறு அறிவீர்கள்? பிரச்சினை இல்லாத வாழ்க்கைதான் சபிக்கப்பட்ட வாழ்க்கை..எதிர்பாராத திருப்பங்கள்தானே நம் வாழ்க்கையைச் சுவையாக அமைத்துத் தரமுடியும்...!!! போராடித்தான் பாப்போமே...

***சரியான பதிலடி !!!***

ஜென் துறவி ஒருவர், நீண்ட தூர பயணத்தை மேற்கொள்ள இருந்தார். அதனால் அவர் தன் மடாலயத்தில் இருந்து புறப்பட்டார். பயணம் செய்யும் போது, ஒரு பெரிய ஆற்றை கடக்க வேண்டியிருந்தது. ஆனால் அந்த ஆற்றை கடக்க சாய்ந்து விழுந்த ஒரு தென்னை மரத்தை தான் அந்த ஊர் மக்கள் பயன்படுத்தினர். இந்த மரத்தில் ஒருவர் மட்டுமே செல்ல முடியும். அத்தகைய குறுகலான மரம் அது. துறவியும் கடப்பதற்கு மரத்தில் ஏறி நடக்க ஆரம்பித்து, கரையை கடக்கும் அளவில் வந்துவிட்டார். அப்போது மறுகரையில் இருந்து, ஒருவன் ஆற்றை கடக்க ஏறி வந்தான். அவன் மிகவும் கோபக்காரன், யாரையும் மதிக்காதவன். இதனால் அவன் ஊரில் உள்ளோரிடம் கெட்டப் பெயரைத் தான் ஈட்டினான். ஆனால் அவனிடம் துறவி அன்புடன், "தம்பி, எனக்கு சிறிது வழிவிடுங்கள், நான் இந்த ஆற்றை கடக்க இன்னும் சிறிது தூரம் தான் உள்ளது. கொஞ்சம் வழிவிட்டால் நன்றாக இருக்கும்" என்று கேட்டார். அதற்கு அவன், "முட்டாள்களுக்கு வழிவிடும் பழக்கம் எனக்கு இல்லை" என்று ஆணவத்தோடு கூறினான். ஆனால் பெரியவர் எதுவும் பேசாமல், திரும்பி சென்றார். பின் அவன் "எதற்கு எனக்கு வழிவிட்டீர்கள்?" என்று கேலியாக கேட்டான். துறவி அதற்கு "முட்டாள்களுக்கு வழிவிடும் பழக்கம் எனக்கு உண்டு" என்று கூறி மறுபடியும் நடக்க ஆரம்பித்தார்.



**படித்ததில் பிடித்தது...**

ஒரு ராஜா ஒரு கோவிலில் தன் பிறந்த நாளை முன்னிட்டு அன்னதானம் செய்துகொண்டிருந்தான். அப்போது ஒரு பரம ஏழை வந்து வரிசையில் நின்றான். அவனை பார்த்த மற்றவர்கள் முகம் சுளித்து ஒதுங்கி நின்றனர். இதை உணர்ந்த அந்த ஏழை, இவர்களுக்குத்தான் நம்மை பிடிக்கவில்லையே, வரிசையில் நிற்காமல் ஒதுங்கி நின்று எல்லோரும் அன்னதானம் பெற்றபின்பு நாம் வாங்கிக்கொள்வோம் என்று தள்ளி நின்றான். நேரம் போய்க்கொண்டே இருந்தது. இவன் தள்ளி நின்றதால் இவனுக்குப் பின்னால் வந்தவர்கள் எல்லாரும் அன்னதானம் பெற்றார்கள். சிலர் அன்னதானம் பெற்றுக்கொண்டு இவனை ஏளனம் செய்து சிரித்துவிட்டுப் போனார்கள். இவன் வாயைத் திறந்து எதுவும் சொல்லவில்லை என்றாலும் மனதிற்குள் ஒரு சோகம். எல்லோருக்கும் தரப்படும் அன்னதானம் கூட நமக்கு கிடைக்க எவ்வளவு காத்திருப்பு? எவ்வளவு போராட்டம்? எவ்வளவு இழிசொல்? போன ஜென்மத்தில் என்ன பாவம் செய்தோமோ இப்படி தவிக்கிறோமே? என்று தன் விதியை நொந்துகொண்டான். மாலை வரை காத்திருந்து காத்திருந்து, சரி நமக்கு இன்று பட்டினி என்று எழுதியுள்ளது போல 'அப்பனே ஆண்டவா...என்னை ஏனப்பா இப்படி ஒரு இழி பிறவியில் பிறக்கச் செய்தாய்' என்று கோபுரத்தை பார்த்து மனதில் உள்ள தன் குமுறலைச் சொல்லி, கோவில் அருகே உள்ள குளத்தங்கரையில் அமர்ந்தான். குளத்து நீரை கையில் எடுத்து முகத்தை கழுவி, படியில் சோர்வாக அமர்ந்தான். ராஜா அன்னதானம் கொடுத்து முடித்து, அந்த படித்துறையில் காலாற நடந்து வந்தார். "என்னப்பா...சாப்பிட்டாயா?" என்று ஒரு பத்தடி தூரத்திலிருந்து குளத்தில் தன் முகத்ததை பார்த்துக் கொண்டிருந்த அந்த ஏழையிடம் கேட்டார். கேட்பது ராஜா என்று தெரியாமல் "ஊரே சாப்பிட்டது..என் தலையில் இன்று பட்டினி என்று எழுதியுள்ளது போல அய்யா" என்று விரக்தியாக, முகத்தை திருப்பாமல் குளத்துநீரை பார்த்தபடியே பதில் சொன்னான் அந்த ஏழை.

.

அவன் சொன்ன பதில் ராஜாவின் மனதை உருக்கியது. என் பிறந்தநாளில் ஊர் மக்கள் யாரும் பசியுடன் உறங்கச் செல்லக் கூடாது என்றுதானே அன்னதானம் ஏற்பாடு செய்தோம்? ஒரு அப்பாவி ஏழை இப்படி விடுபட்டுள்ளானே என்று அவன் அருகில் சென்று அவன் தோளில் கை வைத்து 'மன்னித்துவிடப்பா...ரொம்ப பசிக்.கிறதா உனக்கு?" என்று கேட்க. குளத்து நீரில் தலையில் கிரீடம், காதல் குண்டலம், நெற்றியில் திருநீர், முகத்தில் வாஞ்சை என்று ராஜா தெரிய திடுக்கிட்டு எழுந்தான். 'ராஜா...நீங்கள் என்று தெரியாமல் அமர்ந்துகொண்டே பதில் சொல்லிவிட்டேன்...மன்னிக்க வேண்டுகிறேன்' என்று பதறினான். இவனின் பணப்பை பார்த்த ராஜா சத்தமாக சிரித்தார். 'வா...இன்று நீ என்னோடும் ராணியோடும் விருந்து உண்ணப்போகிறாய்' என்று அவனை பேசவிடாமல் எழுத்துச் சென்று அவரின் தேரில் ஏற்றிக்கொண்டு, அரண்மனைக்கு விரைந்தார். 'போய் குளித்துவிட்டு வா' என்று தனக்கென்று வாங்கி வைத்திருந்த புதிய ஆடைகளில் ஒன்றை அவனுக்கு கொடுத்தார். குளித்து, புத்தாடை அணிந்தது வந்தான். அறுசுவை விருந்து கொடுத்தார். சாப்பிட்டு முடித்து அவன் கையில் ஒரு குடம் நிறைய பொற்காசுகளை கொடுத்தார் 'இன்றிலிருந்து நீ ஏழை இல்லை...இந்த பணத்தை வைத்து நீ விரும்பும் தொழிலை நேர்மையாக செய்து கௌரவமாக வாழ்" என்று வாழ்த்தினார். அதுவரை அமைதியாக இருந்த ஏழையின் கண்ணில் தாரை தாரையாக கண்ணீர் கொட்டியது. 'ஏனப்பா அழுகிறாய்?' என்று ராஜா கேட்க. "நான் இதுநாள் வரை பிறவி ஏழை என்று மட்டும்தான் நினைத்திருந்தேன் ராஜா...இந்தத் தருணம்தான் நான் ஒரு பிறவி முட்டாள் என்று புரிந்துகொண்டேன்" என்று சொன்னான். ராஜா ஏன் அப்படிச் சொல்கிறாய் என்று கேட்க "வாழ்க்கையில் இன்றுதான் முதல் முறையாக கோபுரத்தை பார்த்து என்னை ஏன் இப்படி வைத்திருக்கிறாய் என்று ஆண்டவனிடம் கேட்டேன்...கேட்ட சில நிமிடங்களில் உங்களை அனுப்பி என் தலையெழுத்தையே மாற்றி விட்டான்.. கடவுளிடம் கேட்டால் நாம் கேட்டதைவிட இன்னும் பல மடங்கு தருவான் என்று இன்றுவரை புரியாமல் ஒரு முட்டாளாகத்தானே இருந்துள்ளேன்" என்று சொல்லி அழுதான். நமக்கு ஒன்று கிடைக்கவில்லை என்றால் சராசரியைவிட மிகச் சிறந்த ஒன்றை நமக்காக கடவுள் தரப்போகிறார் என்று நம்புங்கள்.

நல்லதே நடக்கும்.🙏



**"The Weight of the Glass" -- (author)Anonymous**

Twenty years ago, when Angel and I were just undergrads in college, our psychology professor taught us a lesson we've never forgotten. On the last day of class before graduation, she walked up on stage to teach one final lesson, which she called "a vital lesson on the power of perspective and mindset." As she raised a glass of water over her head, everyone expected her to mention the typical "glass half empty or glass half full" metaphor. Instead, with a smile on her face, our professor asked, "How heavy is this glass of water I'm holding?" Students shouted out answers ranging from a couple of ounces to a couple of pounds. After a few moments of fielding answers and nodding her head, she replied, "From my perspective, the absolute weight of this glass is irrelevant. It all depends on how long I hold it. If I hold it for a minute or two, it's fairly light. If I hold it for an hour straight, its weight might make my arm ache. If I hold it for a day straight, my arm will likely cramp up and feel completely numb and paralyzed, forcing me to drop the glass to the floor. In each case, the absolute weight of the glass doesn't change, but the longer I hold it, the heavier it feels to me." As most of us students nodded our heads in agreement, she continued. "Your worries, frustrations, disappointments, and stressful thoughts are very much like this glass of water. Think about them for a little while and nothing drastic happens. Think about them a bit longer and you begin to feel noticeable pain. Think about them all day long, and you will feel completely numb and paralyzed, incapable of doing anything else until you drop them."

**RANDOM THINGS TO REMEMBER:**

- When the mind is strong and the heart is pure, you are free. (Paramahansa Yogananda)
- Life is not the way it is supposed to be. It is the way it is. The way you cope with it is what makes the difference. (Virginia Satir)
- Keep nurturing the people in your life who motivate you, encourage you, inspire you, enhance your good energy, and make you feel loved, alive and happy.


















உலகிலேயே முதல் நூறு மிகப்பெரிய பணக்கார தொழிலதிபர்களில் ஒருவருக்கு தீடீரென ஒரு விசித்திர சிந்தனை.

இத்தனை வருட வேர்வை சிந்தின உழைப்பில் பல்லாயிரக்கணக்கான கோடி பணம் சொத்து சேர்த்து விட்டேன். என் பல தலைமுறைகள் உட்காந்த இடத்தில் கஸ்டமின்றி இன்பத்தை அனுபவிக்கக் கூடும். எனினும் இவை என் உழைப்பு. நான் இறந்திடும் போது சொர்க்கம் செல்ல வேண்டும். என்னுடனே இவையனைத்தையும் எடுத்து அங்கும் அனுபவிக்க வேண்டும். இதற்கு என்ன வழி? என்பதே அச்சிந்தனை. மறுநாள் அலுவலக ஊழியர்கள் அனைவரையும் அழைத்து இதற்கான விடையளிக்க வினவ "இவருக்கு என்ன பைத்தியம் தீடீரென பிடித்து போயிற்றே" என அனைவருக்கும் உட்சிந்தனை. பதிலளிக்க ஒருவராலும் கூடாதிருந்தது. இதனை கேள்விப்பட்ட அலுவலக துப்புரவாலர் ஒருவர் தொழிலதிபதியை அனுகி தான் பதிலளிக்க கூடும் என்றார். ஏளனமாக அனைவரும் அவனைப் பார்க்க அதிபரோ "இத்தனை பேர் பதிலளிக்க இயல வில்லை. படிக்காத இவன் எப்படி?"என அலட்சிய பார்வை செலுத்தினார். அச்சிப்பத்தியோ "ஐயா நீங்க வியாபார விஷயமாக அமெரிக்கா செல்லுப்போது இந்திய பணத்தை எடுத்து செல்வீர்களா? சரி இங்கிலாந்து,சிங்கப்பூர் ஆஸ்திரேலியா என பல நாடுகள் செல்லும்போது என்ன செய்வீர்கள்? என் கேட்க அவரும் "கரென்ஸி மாற்றம்"(currency exchange)செய்து கொள்வேன் என்றார். மிக்க நன்று. அதே போல் சொர்க்கம் செல்ல "புண்ணியம்" எனும் சொர்க்கத்திற்குறிய கரென்ஸியால் உங்கள் உழைப்பு புவியின் வாழ்கையின் அர்த்தம் இவையனைத்தையும் மாற்றம் (exchange) செய்து கொள்ளவும். இதை தவிர வேறு வழியில்லை" என்று தெளிவாக கூறிவிட்டு தனது துப்புரவு தொழிலை தொடர சென்று விட்டார். வாழும் வாழ்கைக்கு அர்த்தம் ஓர் எளியவரால் நிராகரிக்கப்பட்டவரால் அற்பமாக எண்ணப்பட்டவரால் முத்துக்களாக உதிர்க்கப்பட்டது நமக்கும் பொருந்தும்👍

